அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com

அ.எண் :191/2015
தேதி :12.08.2015

# கூகுள் நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ள தமிழர் சுந்தர் பிச்சை அவர்களுக்கு சமத்துவ மக்கள் கட்சி நிறுவனர் – தலைவர் ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ அவர்கள் வாழ்த்து

தொன்று தொட்டு உலக அளவில் தமிழர்கள் பல்வேறு சாதனைகளைப் புரிந்து வந்திருக்கிறார்கள். குறிப்பாக அறிவுசார் பணிகளில் தமிழர்களின் பங்களிப்பு மிகப்பெரும் அளவில் இருந்து வருகிறது என்பதே நிதர்சனமான உண்மை. பல்வேறு காலகட்டங்களில் ஒவ்வொரு துறையிலும் தமிழர்கள் சாதனை புரிந்து வரலாறு படைத்திருப்பதோடு தமிழினத்திற்கே பெருமையும் கௌரவமும் கிடைக்கச் செய்திருக்கிறார்கள்.

அந்த வகையில் தற்சமயம் இந்தியர்களுக்கும் குறிப்பாக தமிழர்களுக்கும் பெருமை சேர்த்திருப்பவர் கூகுள் நிறுவனத்தின் புதிய தலைமைச் செயல் அதிகாரியாக தேர்வு செய்யப்பட்டுள்ள தமிழகத்தைச் சேர்ந்த சுந்தர் பிச்சை அவர்கள்.

கூகுள் நிறுவனத்தின் வளர்ச்சியே ஒரு பிரமிக்கத்தக்க வரலாற்றுப் பின்னணி கொண்டது. வலைதளத் தேடுதலுக்கான கூகுள் நிறுவனத்தின் மென்பொருளான ‘கூகுள் குரோம்’ உலக அளவில் மிக அதிகம் பயன்படுத்தப்படுவது என்ற பெருமைக்குரியது. அந்த ‘கூகுள் குரோம்’ மென்பொருளை வடிவமைப்பதில் முக்கியப் பங்கு வகித்திருப்பவர் சுந்தர் பிச்சை. இந்த நியமனம் மூலம் அறிவிலும், ஆற்றலிலும் தமிழர்கள் பிறருக்குச் சற்றும் குறைந்தவர்கள் இல்லை என்ற உண்மை உலகுக்கு உணர்த்தப்பட்டிருக்கிறது என்றால் மிகையாகாது.

சென்னையில் பிறந்து வலைத்தள உலகின் சிகரம் தொட்டிருக்கும் சுந்தர் பிச்சை அவர்கள் தனது 43 வயதில் நிகழ்த்தியிருக்கும் சாதனைக்கு சமத்துவ மக்கள் கட்சி சார்பில் பாராட்டுகளையும் நல்வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன். அவர் மேன்மேலும் பல சாதனைகளை நிகழ்த்தி தமிழினத்திற்கும், தாய்நாட்டிற்கும் மேலும் பல சிறப்புகளைச் சேர்க்க வேண்டும் என்றும் வாழ்த்துகிறேன். சரித்திரப் புகழ் படைத்திருக்கும் சுந்தர் பிச்சை அவர்களின் உழைப்பும், வளர்ச்சியும் இன்றைய

*இளைஞர் சக்திக்கு வழிகாட்டுதலாகவும், தூண்டுதலாகவும் அமையும் என்பதில் ஐயமில்லை!....*

*நன்றி, வணக்கம்,*
*உழைப்பவரே உயர்ந்தவர்,*
*என்றும் அன்புடன்*

ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ
தலைவர்